# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

## குடியியற் கல்வி

சுட்டெண் .................................................... தரம்: 9 நேரம் - 2.00 மணித்தியாலம்

### பகுதி - I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01) நாம் சமூக பாதுகாப்பினை பெறுவதற்கு முதன் முதலில் அங்கத்தவராகும் நிறுவனம்.
1. கோவில் 2. குடும்பம் 3. பாடசாலை 4. சனசமூகநிலையம்

02) "நீங்கள் என்ன செய்தாலும் நல்லவராகத் திகழுங்கள்" என்பது யாருடைய பிரபலமானதொரு கூற்றாகும்.
1. ஆபிரகாம் லிங்கன் 2. தோமஸ் அல்வா எடிசன்
3. மர்சலின் ஜயகொடி 4. குமாரதுங்க முனிதாச

03) ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாகக் கருதப்படுவது
1. சமயம் 2. சட்ட வல்லுநர்களின் கருத்து
3. பழக்க வழக்கங்கள் 4. அரசியல் திட்ட யாப்பு

04) சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களில் ஒன்று
1. நீதிமன்றம் 2. சந்தை 3. குடும்பம் 4. பாடசாலை

05) இலங்கை விமானப்படை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1. 1949 2. 1950 3. 1951 4. 1998

06) விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினையொன்று தொடர்பான தீர்வினைத் தேடுகின்ற செயன்முறையாக அமைவது
1. அபிவிருத்தி 2. ஆராய்ச்சி 3. தொழில் 4. கைத்தொழில்

07) தொழில்நுட்ப மாற்றத்தின் மூலம் மனித வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றம்
1. சமூக சிக்கல்கள் அதிகரித்தமை 2. விளைதிறன் அதிகரித்தமை
3. மனித தேவைகள் அதிகரித்தமை 4. சுற்றாடல் மாசடைதல்

08) கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ரொபட் ஓவனின் பிறப்பிடம்
1. அமெரிக்கா 2. இந்தியா 3. ஜேர்மனி 4. பிரித்தானியா

09) எமது நாட்டிற்கே உரித்தான மூலிகைச் செடி
1. ஆசினிப்பலா 2. கெக்குண 3. மரமஞ்சள் 4. சிறுமாங்காய்

10) எதென்ஸ் நகர அரசில் பிரதான ஆட்சி நிறுவனம்

1. பிரசைகள் சபை    2. பாராளுமன்றம்    3. நீதியமைச்சு    4. நீதிமன்றம்

11) பல கட்சி ஆட்சிமுறை நிலவும் நாடுகளில் உன்று

1. கியூபா    2. இந்தியா    3. வடகொரியா    4. ஐக்கிய அமெரிக்கா

12) இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு

1. 1865    2. 1910    3. 1931    4. 1958

13) சுமோ விளையாட்டுக்குரிய நாடு

1. இலங்கை    2. சீனா    3. பிரித்தானியா    4. யப்பான்

14) 1987ம் ஆண்டில் 15ம் இலக்க உள்ளூராட்சி சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட சபை

1. நகரசபை    2. மாவட்ட அபிவிருத்தி சபை

3. கிராமோதய சபை    4. பிரதேச சபை

15) உள்ளூராட்சி மன்றங்களில் மாநகரசபையின் தலைவர்

1. நகரபிதா    2. தலைவர்    3. செயலாளர்    4. நகர ஆணையாளர்

16) உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் அமைப்பு

1. மாகாணசபை    2. உள்ளூராட்சி நிறுவனம்

3. நீதிமன்றம்    4. தேசிய எல்லை நிர்ணய ஆளுனர்

17) ஜனநாயக ஆட்சிமுறை பற்றிக் கூறிய அறிஞர்

1. ஜெயகொடி    2. அஞ்சலா    3. சீலர்    4. அரிஸ்டோட்டில்

18) இலங்கையில் முதலாவது உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம்

1. தும்பற    2. கொழும்பு    3. பதுளை    4. பரந்தன்

19) பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது

1. ஜனாதிபதி மட்டும் ஆளும் ஆட்சி

2. மக்கள் பிரதிநிதிகள் மூலம் நடாத்தப்படும் ஆட்சி

3. சபாநாயகர் மூலம் நடாத்தப்படும் ஆட்சி

4. செயலாளர் நாயகம் மூலம் நடாத்தப்படும் ஆட்சி

20) இலங்கை இராணுவப் படையின் மகுட வாசகம்

1. இலங்கை வான்பரப்பை பாதுகாப்போம்

2. தந்தை நாட்டுக்காக

3. தர்மத்துடன் இருப்பவன் தர்மத்தால் காக்கப்படுவான்.

4. நாட்டைச் சுற்றிய தங்க வேலி    (20x2=40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) 1. சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. இலங்கையில் நடைமுறையிலுள்ள நீதிமன்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. நாடொன்றின் பொருளாதாரத்தில் இடம்பெறும் பிரதான செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. நேரடி ஜனநாக ஆட்சிமுறையை தற்காலத்தில் செயற்படுத்துவதில் காணப்படும் இடர்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
6. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயத்தின்போது கவனத்தில் கொள்ளப்படும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(6x2 = 12 புள்ளிகள்)

02) 1. சமூகப் பாதுகாப்பு என்றால் என்ன?
2. சமூகப் பாதுகாப்பிற்கு பாடசாலையினால் ஆற்றப்படும் பணிகள் நான்கு தருக.
3. இலங்கையில் சமூகவிரோதச் செயற்பாடுகளைத் தடுத்து சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் செயற்பாடுகளை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

03) 1. சட்டத்தின் இரு பிரதான பிரிவுகளும் எவை?
2. சட்டத்தின் பண்புகள் இரண்டு தருக.
3. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கடமைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04) 1. தொழில்நுட்பம் என்றால் என்ன?
2. சேவைத்துறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. சகவாழ்விற்கான பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

05) 1. ஜனநாயகம் என்பதன் வரைவிலக்கணம் யாது?
2. பிரஜை ஒருவருக்குள்ள உரிமைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. அரசியல் கட்சி ஒன்றின் பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

06) 1. இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் மூன்று தருக.
2. வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதிகள் நான்கு தருக.
3. தேசியக் கொள்கை மூலம் கிடைக்கும் பயன்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

07) 1. நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மூன்றையும் குறிப்பிடுக.
2. உள்ளூராட்சிமன்ற பிரதானியின் அதிகாரங்கள் நான்கு தருக.
3. உள்ளூராட்சி மன்றங்கள் மூலதன வளத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)